1978 மார்ச் 28]

தருகிறது. அலங்காநல்லூர் ஆலையில் 125 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியும் 116 ரூபாய்தான் கொடுத்திருக்கிருர்கள். அதற்குரிய காரணத்தை அரசு ஆராய்ந்து உரிய விலையை நிர்ணயிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் வட மாநிலங்களில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிருர்கள், தென் மாநிலங்களைப் பொறுத்த அளவில் குறைந்த விலைதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தைப் பொறுத்த அளவில் கடந்த ஜனவரி 10, 11 தேதிகளில் நானும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், முதல்வர்கள் மாநாட்டில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் சொல்லிய கருத்து தென் மாநிலங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிருர்கள். அந்த அளவுக்குக் வட மாநிலங்களில் அதிகமாக இல்லை என்று எடுத்துச் சொன்னுர்கள். கரும்பை அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு குறைந்த விலையும், குறைவாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக விலையும் என்ற நிலை இருப்பது சரியல்ல என்று நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஆகவே இப்போது மார்ச் 1ஆம் தேதியிலிருந்து சர்க்கரையினுடைய விலையைக் கூட 15 பைசா அதிகமாகக் கூட்டியிருக்கிருர்கள். ஆகவே, வருகின்ற நாட்களில் சர்க்கரையினுடைய விலையை அதிகமாக்கினுல் கரும்புக்கு கொடுக்கப்படவேண்டிய விலையைச் சேர்த்து கொடுக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அலங்காநல்லூர் ஆலையைப்பற்றிச் சொன்னுர்கள். அதைப்பற்றித் தனியாகச் சொன்னுல் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ). விசாரணைக் கமிஷன் முன்னுள்ள பொருள்பற்றி முதல்வர் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், சோமசுந்தரம் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது பற்றி அங்கே

சொல்லியிருக்கிறார்கள். சட்டவிதிகளுக்கு புறம்பானது என்பது பற்றிய பிரச்னையை நான் ஏற்கெனவே எழுப்பியபோது சபாநாயகர் அவர்கள் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், நான் எழுதியும் கொடுத்திருக்கிறேன், அதைப்பற்றி தீர்ப்பைத் தாங்களே வழங்கப்போகிறீர்களா அல்லது அந்தத் தீர்ப்பு எப்போது வழங்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்கள் வந்ததற்குப் பின்னாலே அது எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேரவைத் தலைவர் அவைக்கு வருகை தராதது குறித்து.

திரு. துரை முருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர், இன்றைக்கு இங்கே சட்டமன்றத் துறை மானியம் வருகிறது. ஆகவே இது ஒரு முக்கியமான நாள். சபாநாயகர் அவர்கள் இரண்டு தினங்களாக இங்கே வரவில்லை. என்ன காரணம்? அவருக்கு வேறு எங்கேயும் நிகழ்ச்சியா? அல்லது உடல் நலம் குன்றியிருக்கிறதா? அல்லது ஏதாவது நிகழ்ச்சி இருக்கிறதா? அவைத் தலைவர் அவர்கள் வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவைத் தலைவர் அவர்கள் உடல் நலம் சரியில்லாததால் கலந்து கொள்ளவில்லை. நாளைக்கு வருவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : உடல் நலமா அல்லது மன நலமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடல் நலம் என்று ஏற்கனவே நான் சொல்லி விட்டேன். ஏன் உங்களுக்கு மனநலம் சரியில்லையா?

திரு. எஸ். ஆர். இராதா: மன நலம் என்று சொல்கிறார்களே.